## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.549/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -1 /PW- 1 |
| Name | : திரு. சிவசக்தி |
| Father/Husband's Name | : அங்கமுத்து |
| Village | : நெ.233, வடக்கு தெரு |
| Taluk | : அனுமந்தண்டலம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 23 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது அனுமந்தண்டலத்தில் வசித்து ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.07.2023 அன்று இரவு 10.00 மணியளவில் நான் வாடகையில் குடியிருந்த எனது வீட்டின் மொட்டை மாடியில் எனது நண்பர்களான வசந்தராஜ், ஜெகதீஷ்வரன், குபேந்திரன் ஆகியோர்களுடன் நான் படுத்து கொண்டிருந்தேன். விடியற்காலை 03.00 மணியளவில் சத்தம் கேட்டதால் நாங்கள் எழுந்து பார்த்தோம். நான் படுத்திருந்த இடத்திற்கு பக்கத்தில் வைத்திருந்த Black colour Redmi போனை ஒரு நபர் எடுத்து கொண்டு படியில் ஓடுவதை பார்த்தேன். அந்த மொபைல் போன் எனது நண்பர் ஜெகதீஸ்வரன் உடையது. எனது போன் ரிப்பேர் ஆனதால் அவரது மேற்சொன்ன போனை நான் பயன்படுத்தி வந்தேன். ஆஜர் எதிரி தான் அந்த செல்போனை எடுத்து கொண்டு ஓடிய நபர். இது சம்மந்தமாக மறு நாள் காலை பாலூர் காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன். நான் புது கம்பெனியில் வேலைக்கு சேர்ந்திருந்தால் அன்றைய தினம் என்னால் பர்மிஷன் கேட்க

முடியவில்லை. அதனால் மறுநாள் புகார் அளித்தேன். சாட்சியிடம் இவ்வழக்கு புகார் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது என்று கூறுகிறார். **அந்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சியிடம் வழக்கு சொத்து காண்பிக்கப்பட்டது. சாட்சி அந்த செல்போன் ஆஜர் எதிரி எடுத்து சென்றதாக கூறுகிறார். **அந்த செல்போன் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசாரிடம் புகார் அளித்த பிறகு 08.07.2023 அன்று மதியம் எங்களை அழைத்து போன் கிடைத்துவிட்டதாக கூறினார்கள். நானும் எனது நண்பர் ஜெகதீஸ்வரனும் சென்று எனது போனை அடையாளம் காட்டினோம். நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொள்ளுமாறு போலிசார் கூறினார்கள். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜரில்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 549/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 2/PW- 2 |
| Name | : திரு. ஜெகதீஷ்வரன் |
| Father/Husband's Name | : பிலேந்திரன் |
| Village | : நெ.4/74, ஆதி திராவிடர் தெரு |
| Taluk | : கிருஷ்ணாபுரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : 24 |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் வசித்து ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06.07.2023 அன்று இரவு 03.00 மணியளவில் சத்தம் கேட்டு எழுந்தோம். ஆப்பூரில் உள்ள பாஸ்கரின் வாடகை ரூமில் நண்பர்களோடு மொட்டை மாடியில் தூங்கி கொண்டிருந்தோம். சத்தம் கேட்டு எழுந்து பார்க்கும் போது என்னுடைய செல்போனை ஒரு நபர் தூக்கி கொண்டு ஓடினார். அவரை நான் பார்த்தேன் ஆனால் அந்த நபரை பிடிக்க முடியவில்லை. ஆஜர் எதிரி தான் மொபைல் எடுத்து சென்ற நபர். அந்த போன் என்னுடையது அந்த போனை சிவசக்தி தன்னுடைய போன் ரிப்பேர் ஆனதால் என்னிடமிருந்து வாங்கி பயன்படுத்தி கொண்டிருந்தார். என்னால் அந்த போனை பார்த்தால்அடையாளம் காண முடியும். சாட்சியிடம் வழக்கு சொத்தான மொபைல் போன் காண்பிக்கப்பட்டது. சாட்சி தன்னிடம் காட்டப்படும் Redmi Black colour போனை தான் எதிரி எடுத்து சென்றதாக கூறுகிறார். சிவசக்தி என்னுடைய போனை அவர் பயன்படுத்தி வந்ததால் அவரே புகார் அளித்தார். 08.07.2023 அன்று

மதியம் போலிசார் எங்களுக்கு போன் செய்து போன் கிடைத்துவிட்டதாக தகவல் கூறினார்கள். எங்களிடம் எதிரியை அடையாளம் காட்ட சொன்னார்கள். நாங்கள் அடையாளம் காண்பித்தோம். நான், வசந்த், குபேந்திரன், சிவசக்தி ஆகியோர்கள் சென்று அடையாளம் காண்பித்தேன். அன்றைய தினம் நான், வசந்த், குபேந்திரன், சிவசக்தி ஆகியோர்கள் மாடியில் தூங்கி கொண்டிருந்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜரில்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.